இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம்
வேளாண் அறிவியல் நிலையம்
ஈரோடு மாவட்டம்

KVKs 1974-2024
कृषि विज्ञान केन्द्र Krishi Vigyan Kendras Serving Farmers
MYRADA

# உழவர் மலர்

மலர் : 117 ஏப்ரல் - ஜூன் 2026

## மானாவாரி நிலக்கடலையில் மகசூலை அதிகரிக்கும் தொழில்நுட்பங்கள்

நிலக்கடலை பயிரானது ஈரோடு மாவட்டத்தின் முக்கிய எண்ணெய்வித்து பயிர்களில் ஒன்றாகும். மானாவாரி சாகுபடியில் மழையின் நிலையற்ற தன்மை, குறைந்த மண் ஈரப்பதம், பயிர் எண்ணிக்கை குறைதல் மற்றும் ஊட்டச்சத்து பற்றாக்குறை போன்ற காரணங்களால் மகசூல் பாதிக்கப்படுகிறது.

எனவே, தரமான விதைத் தேர்வு, விதைநேர்த்தி, ஊட்டமேற்றிய தொழு உரம், ஜிப்சம் பயன்பாடு, சரியான பயிர் எண்ணிக்கை மற்றும் தேவையான நேரத்தில் ஊட்டச்சத்து தெளிப்பு போன்ற ஒருங்கிணைந்த தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதன் மூலம் மானாவாரி நிலக்கடலையில் மகசூலையும் வருமானத்தையும் அதிகரிக்கலாம்.

### 1. ஊட்டமேற்றிய தொழு உரம் இடுதல்



நிலக்கடலை விதைப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே ஊட்டமேற்றிய தொழு உரத்தை தயாரிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு நன்கு மக்கிய தொழு உரம் 500 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 25 கிலோ, பொட்டாஷ் 30 கிலோ ஆகியவற்றை நன்கு கலந்து தயாரிக்க வேண்டும். கலவையை நிழலான இடத்தில் குவித்து மண் அல்லது களிமண்ணால் மூடி ஈரப்பதத்தைப் பராமரித்து சேமிக்கலாம். விதைப்பின்போது இதனை வயலில் சீராக இட்டு மண்ணுடன் கலக்க வேண்டும்.

இதன் மூலம் மண்ணின் காற்றோட்டம் மற்றும் நீர்ப்பிடிப்புத் திறன் மேம்படுவதுடன் நுண்ணுயிரிகளின் செயல்பாடும் அதிகரிக்கிறது. மானாவாரி நிலையில் பயிருக்கு ஊட்டச்சத்து கிடைப்பதை இது மேம்படுத்துகிறது.

### 2. விதை நேர்த்தி செய்தல்

மானாவாரி நிலக்கடலையில் போதிய பயிர் எண்ணிக்கையைப் பராமரிப்பது மகசூலுக்கு மிகவும் முக்கியமானது. ஒரு சதுர மிட்டருக்கு சுமார் 33 செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க வேண்டும்.

தண்டு அழுகல் மற்றும் வேர் அழுகல் போன்ற நோய்களைத் தடுக்க, ஒரு கிலோ விதைக்கு டிரைக்கோடெர்மா 4 கிராம் அல்லது கார்பன்டாசிம் 2 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்யலாம்.



அதன்பின் விதைப்பதற்கு முன் அசோஸ்பைரில்லம், ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா ஆகிய உயிர் உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் விதையுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.

### 3. ஜிப்சம் இடுதல்

நிலக்கடலைக்கு சுண்ணாம்பு மற்றும் கந்தகச் சத்துகள் முக்கியமானவை. இதற்காக ஒரு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தை அடியுரமாகவும் மேலும் 80 கிலோவை விதைத்த 40-45 ஆம் நாளில் களை எடுக்கும்போது மேலுரமாகவும் இடலாம்.

ஜிப்சத்தில் சுமார் 23 சதவீத சுண்ணாம்புச் சத்தும் 18 சதவீத கந்தகச் சத்தும் உள்ளன. ஜிப்சம் இடுவதால் மண் பொலபொலப்பாகி காய்கள் மண்ணுக்குள் நன்கு இறங்குவதற்கும் காய் பிடிப்பு மற்றும் பருப்பு முற்றுதலுக்கும் உதவுகிறது. கந்தகச்சத்து நிலக்கடலையின் எண்ணெய் மற்றும் புரதத்தையும் மேம்படுத்துகிறது. சுண்ணாம்புச் சத்து அதிகமாக உள்ள மண்ணில் மண் பரிசோதனை அடிப்படையில் மட்டுமே ஜிப்சம் பயன்படுத்த வேண்டும்.

### 4. ஊட்டச்சத்து கலவை தெளித்தல்

நன்கு வளர்ச்சியடைந்த முழுமையான பருப்புகளைப் பெற ஊட்டச்சத்து தெளிப்பு உதவுகிறது. இதற்காக டிஏபி 1 கிலோ, அம்மோனியம் சல்பேட் 400 கிராம், போராக்ஸ் 200 கிராம் ஆகியவற்றை 15 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு வைத்திருந்து மறுநாள் வடிகட்ட வேண்டும்.

இதனுடன் தண்ணீர் சேர்த்து மொத்தம் 200 லிட்டர் கரைசலாக தயாரித்து தேவையெனில் வளர்ச்சி ஊக்கி சேர்த்து விதைத்த 25 ஆம் நாளில் ஒரு ஏக்கருக்கு தெளிக்கலாம். தெளிக்கும் போது வயலில் போதிய ஈரப்பதம் இருப்பது அவசியம்.

மேற்கண்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் மானாவாரி நிலக்கடலையில் பயிர் நிலைத்தன்மை, காய்பிடிப்பு மற்றும் மகசூலை மேம்படுத்தி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த முடியும்.

## கரும்பைத் தாக்கம் குருத்து முறுக்கல் நோய் மற்றும் மேலாண்மை முறைகள்

சமீப காலங்களில் கரும்பைத் தாக்கும் ஒரு பூஞ்சான நோய் குருத்து முறுக்கல் நோய் (பொக்கா போயிங்) ஆகும். பொக்கா போயிங் என்ற சொல்லானது கரும்பில் சேதமடைந்த மேற்பகுதி என்பதை குறிக்கும்.

### நோய் தாக்கதலின் அறிகுறிகள்:

இந்த நோயானது பெரும்பாலும் அனைத்து கரும்பு உற்பத்தி செய்யும் நாடுகளிலும் பதிவாகியுள்ளது. குருத்து முறுக்கல் நோயானது குருத்து இலைகளில் அடிப்பகுதியில் ஆரம்பித்து பச்சை நிறம் இழந்து வெண்மையாக வெளிரத் துவங்குகிறது. பாதிக்கப்பட்ட இலைகளின் அடிப்பகுதி குறுகலாகவும் மேலும் சில சமயங்களில் இலைகள் சிறுத்தும் கிழிந்தும் நுனிப்பகுதி காய்ந்தும் காணப்படும். அடுத்தபடியாக இலைகள் அடர் சிவப்பு நிற கோடுகளும் வெண்மை நிறத்தில் பூஞ்சான வளாச்சியும் காணப்படும். சில சந்தர்பங்களில் அழுகல் மென்மையான குருத்துப் பகுதியல் தீவிரமடைகிறது. இதனால் பயிரின் வளர்ச்சி முற்றிலுமாக தடை செய்யப்பட்டு விளைச்சல் கடுமையாக பாதிப்படைகின்றது. ஏப்ரல் மற்றும் மே மாதம் வறண்ட கோடை காலத்திற்கு பின் ஜீன்—ஜீலை மாதங்களில் பெய்யும் பருவ மழை குருத்து முறுக்கல் நோயின் பரவலுக்கு வழி வகுக்கின்றது.



### நோயின் தீவிரம்

குருத்து முறுக்கல் நோயானது பியூசேரியம் என்ற பூஞ்சானம் இலை மற்றும் குறுத்து பகுதியில் தாக்கதால் பயிருக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பருவமழை காலத்தில் வயலில் மிருதுவான இளவயதில் இலைகள் இருக்கும்போது நோய்க் கிருமியானது இலையின் அடிப்பகுதியை தாக்கி நோயை உண்டாக்கின்றது. ஆரம்ப நிலையிலேயே உரிய பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் கரும்பில் நுனிப்பகுதி அழுகி பயிர் வளர்ச்சி தடைபடுகின்றது.

### மேலாண்மை முறைகள்:

- ⇒ பெரும்பாலான கரும்பு இரகங்கள் குருத்து முறுக்கல் நோயினால் தாக்கப்பட்டாலும் சில இரகங்கள் தானாகவே சரியாகி மீண்டு வந்துவிடுகின்றன. குறிப்பிட்ட பயிருக்கு பரிந்துரைக்கப்பட்ட நீர்ப்பாசனம் மற்றம் சரியான அளவு உரமிடுதல் ஆகியவை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.
- ⇒ குருத்து முறுக்கல் நோயின் அறிகுறிகளைக் கண்டறிந்த உடனேயே கார்பன்டசிம் 50 சதம் 1 லிட்டர் தண்ணீர் அல்லது ப்ரொபிகொனசோல் 25 ஈசி 0.4 மி லிட்டர் வீதம் குறுத்துப் பகுதியில் நன்றாக நனையும்படி தெளிக்கவும். முதல் தெளிப்பு முடிந்து 15 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது தெளிப்பு அவசியம்
- ⇒ நடவு செய்யும் போதே விதை கரணைகளை நோயற்ற ஆரோக்கியமான வயலில் இருந்து எடுக்க வேண்டும். மேலும் கரணை நேர்த்தி செய்தல் பலன் அளிக்கும்
- ⇒ வரும் முன் காப்போம் என்னும் பழமொழிக்கேற்ப கரும்பில் குருத்து முறுக்கல் நோய் தென்பட்ட உடனே தகுந்த பரிந்துரைக்கப்பட்ட மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொண்டால் நோய் தாக்கதலில் இருந்து பயிரை எளிதில் பாதுகாத்து நல்ல மகசூல் பெற முடியும்.

## பயிர் சாகுபடியில் ஒருங்கிணைந்த களை மேலாண்மை முறைகள்

வேளாண் பயிர்கள் சாகுபடியில் மகசூலை பாதிக்கும் காரணிகளாக கருதப்படுபவை பூச்சி மற்றும் நோய் தாக்குதல், களைகள் மற்றும் இயற்கை பேரிடர் நிகழ்வுகளாகும். இவற்றுள் களைகளின் பாதிப்பினால் மட்டும் பயிர்களில் சுமார் 25-40 சதவீதம் வரை சராசரியாக மகசூல் இழப்பு ஏற்படுகிறது. ஏனெனில் நாம் சாகுபடி செய்யும் பயிர்களை காட்டிலும் களைச் செடிகள் மிக வேகமாக வளர்வதுடன், அதிக விதைகளையும் உற்பத்தி செய்யும் தன்மை கொண்டவை. எனவே தான் ஓராண்டு களை என்பது ஏழாண்டு மேலாண்மைக்கு சமம் என்று கூறுவார்கள். எனவே களைச் செடிகளை ஒருங்கிணைந்த முறைகளை கையாண்டு அவை பூப்பதற்கு முன் கட்டுப்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும்.



களைச்செடிகள் பொதுவாக பயிர்களின் ஆரம்ப காலங்களில் தான் மிகுந்த பாதிப்பினை ஏற்படுத்தும். பயிர்களின் மொத்த வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கு காலமே பயிர்களும் களைச் செடிகளும் போட்டி போட்டு வளரும் தன்மை கொண்டவை. இந்த குறிப்பிட்ட கால நாட்களில் நாம் முக்கிய பயிர்களை களைகளிடமிருந்து பாதுகாத்தல் மிகச் சிறந்த பலனளிக்கும். உழவியல் மற்றும் பயிர் சாகுபடி முறைகள், இயந்திரங்களை கொண்டு களையெடுத்தல், உயிரியல் முறைகள் மற்றும் இரசாயண களைக் கொல்லிகளை சூழலுக்கு தகுந்தவாறு பயன்படுத்தி களைகளை கட்டுப்படுத்துவதே ஒருங்கிணைந்த களை மேலாண்மை.

பயிர் மற்றும் மண் வகைக்கு ஏற்ற முறையில் இலாபகரமான பயிர் மகசூல் பெற களை விதைகள்

கலப்பில்லாத தரமான விதைகளை தேர்வு செய்து விதைக்க வேண்டும். மேலும் பெரும்பாலான களைகளின் விதைகள் தொழு உரங்களின் மூலமே பரவுகின்றன. எனவே நன்கு மக்கிய தொழு உரங்களையே நிலம் தயாரிப்பின்போது பயன்படுத்த வேண்டும். மேலும் கோடை உழவு செய்வதும் சிறந்த பலனளிக்கும். ஏனெனில் கோடை உழவு செய்வதால் மண்ணிற்கு அடியில் உள்ள விதைகள் பூமியின் மேற்பரப்பிற்கு கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுகிறது. குறிப்பாக வயல்களின் ஓரங்கள் மற்றும் வரப்புகளை சுத்தமாக வைப்பதன் மூலமும் களைகள் பரவுவதை தடுக்கலாம். ஏனெனில் பெரும்பாலான களைகளின் விதைகள் வரப்புகளில் உள்ள களைகளின் மூலமே பெருகுகின்றன.

உழவியல் முறைகளான பயிர் சுழற்சி, மூடாக்கு, நிலப்போர்வை போன்ற முறைகளை கையாண்டும் களைகளை கட்டுப்படுத்தலாம். அகன்ற இடைவெளி உள்ள பயிர்களில் குறிப்பாக வாழை, கரும்பு போன்ற பயிர்களில் வேகமாக வளரும் தட்டைப்பயறு. நரிப்பயறு. பச்சைப்பயறு போன்ற பயிர்களை பயிரிடுவதன் மூலம் களை கட்டுப்படுத்துவதுடன் உபரி வருமானமும் பெறலாம். தென்னை மற்றும் பல்லாண்டு பலன் தரும் பழ மரங்களுக்கிடையே தீவனப் பயிர்களை சாகுபடி செய்தும் களைகளை கட்டுப்படுத்தி தீவன பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்யலாம்.

களை விதைகள் முளைத்த பின் அவற்றை நீக்குதல் சிறந்த பலனளிக்கும். ஏனெனில் மண்ணிற்குள் இருக்கும் விதைகள் முளைத்து விடுவதால் அவற்றை பூப்பதற்கு முன் கைகளால் நிக்கியும் கட்டுப்படுத்தலாம். மேலும் வரிசை இடைவெளியில் சாகுபடி செய்த பயிர்களில் கோனோ மற்றம் ரோட்டரி களைக்கருவிகளை கொண்டு அதே நிலத்தில் மடக்கி உழவு செய்தும் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு செய்வதால் மண்ணில் உள்ள சத்துக்களின் இருப்பு விகிதத்தையும் அதிகரிக்கலாம்.

இரசாயண களைக்கொல்லிகளை பயன்படுத்தி வளர்ந்த களைகளை கட்டுப்படுத்தலாம். களைக்கொல்லிகளை பயன்படுத்தும் முன் பயிர்களின் இனம், களைகளின் வகைகள் ஆகியவற்றை பொருத்து சரியான களைக்கொல்லியை தேர்வு செய்து பயன்படுத்த வேண்டும். மேலும் களைக்கொல்லிகளின் திறனை அதிகரிக்க தேர்வு செய்த மண்ணில் போதுமான அளவு ஈரப்பதம் இருத்தல் அவசியம். களைகளுக்கு ஏற்றவாறு களைக்கொல்லிகளை தேர்வு செய்து பரிந்துரைக்கப்பட்ட அளவு தெளிக்க வேண்டும். இவ்வாறு பல்வேறு யுக்திகளை பண்ணையின் சூழலுக்கு ஏற்ப ஒருங்கிணைந்த முறையில் கையாண்டு களைகளை கட்டுப்படுத்தலாம்.

## பூசா ஹைட்ரோஜெல்

இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு மத்திய வேளாண்மை அமைச்சகம் மற்றும் அறிவியல் தொழில்நுட்ப துறையினரால் ஊக்குவிக்கப்பட்ட ஒரு குருணை வடிவப் பொருளே ஹைட்ரோஜெல் ஆகும். இது இதன் எடையில் 350 மடங்கு நீரை உறிஞ்சி மண்ணில் தக்கவைத்து பயிருக்கு கொடுக்கும்.



பூசா ஹைட்ரோஜெல் நீரை சேமிக்கவும் பயிருக்கு இடும் உரச்சத்துக்களை கரைத்து பயிருக்கு 40 முதல் 60 சதம் வரை வழங்கவும் அனைத்து வேளாண் பயிர்களுக்கும் தோட்டக்கலை பயிர்களான தேயிலை, காப்பி, தென்னை, முந்திரி, ரப்பர் மரம் மற்றும் வனப்பயிர்கள் தவிர வேளாண், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்களுக்கான நாற்றங்கால்களுக்கும் இடலாம்.

### பூசா ஹைட்ரோஜெல்லின் நன்மைகள்

தானியப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பூச்செடிகள் மற்றும் நறுமணப்பயிர்கள் என அனைத்து வகையான பயிர்களுக்கும் பூசா ஹைட்ரோஜெல்லை பயன்படுத்தவதால் விளை பொருட்களின் தரம் மேம்படுகிறது.

- ⇒ அனைத்து பயிர்களுக்கும் குறிப்பாக காய்கறிப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் அளவில் 30-50 சதவிதம் சேமிக்கப்படுவதுடன் வேலை ஆட்கள் தேவை கணிசமாக குறைகிறது.
- ⇒ இரசாயன உரத் தேவையில் 22 முதல் 30 சதவிதம் வரை சேமிக்கலாம்
- ⇒ பயிர்களின் மகசூல் 10 முதல் 30 சதவீதம் வரை அதிகரிக்கிறது
- ⇒ மண்வளம் மற்றும் மண் கட்டமைப்பு மேம்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.

## பலாப்பழம் : மதிப்புக்கூட்டுதல் மற்றும் சந்தை வாய்ப்புகள்

முக்கனி என்பது தமிழர்களின் பாரம்பரியத்தில் சிறப்பிடம் பெற்ற மூன்று பழங்களான மா, பலா, வாழை ஆகியவற்றைக் குறிக்கும். இம்மூன்று பழங்களும் சுவை, ஊட்டச்சத்து மற்றும் மருத்துவப் பயன்களில் சிறந்து விளங்குவதால் முக்கனி என்று போற்றப்படுகின்றன. அவற்றில் பலாப்பழம் தனித்துவமான சுவை, மணம் மற்றும் அதிக ஊட்டச்சத்து கொண்ட பழமாக விளங்குகிறது.

பலாப்பழத்தில் அதிக நார்ச்சத்து, வைட்டமின் ஏ, வைட்டமின் சி, பொட்டாசியம். கால்சியம், மக்னீசியம் மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் போன்ற பல்வேறு ஊட்டச்சத்துகளை கொண்டுள்ளது. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், செரிமானத்தை மேம்படுத்தவும், இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கவும், உடலுக்கு ஆற்றல் வழங்கவும் உதவுகிறது.

## பலாப்பழத்திலிருந்து தயாரிக்கப்படும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள்



1. **பலாப்பழ சிப்ஸ்:** காய் பலாப்பழத்தை மெல்லிய துண்டுகளாக நறுக்கி எண்ணெயில் பொரித்து தயாரிக்கப்படுகிறது. நீண்ட நாள் சேமித்து விற்கலாம்.
2. **பலாப்பழ மாவு:** பழுத்த அல்லத காய் பலாப்பழத்தை உலர்த்தி அரைத்து மாவாக தயாரித்து இட்லி, தோசை, சப்பாத்தி, கேக் போன்றவற்றில் கலந்து பயன்படுத்தலாம்
3. **பலாப்பழ ஜாம்:** பழுத்த பலாப்பழ சுளைகளை சர்க்கரையுடன் சேர்த்து ஜாம் தயாரிக்கப்படுகிறது.
4. **பலாப்பழ ஜெல்லி:** பலாப்பழச் சாற்றில் சர்க்கரை மற்றும் பெக்டின் சேர்த்து தயாரிக்கப்படும் இனிப்பு உணவு.
5. **பலாப்பழ ஸ்குவாஷ் / சிரப்:** பலாப்பழச் சாற்றை பதப்படுத்தி பானமாக தயாரிக்கலாம்.
6. **பலாப்பழ ஜூஸ்:** பழுத்த பலாப்பழத்திலிருந்து சாறு எடுத்து பானமாக விற்கலாம்.
7. **பலாப்பழ கேக் மற்றும் பேக்கரி பொருட்கள்:** கேக், மஃபின், பிஸ்கட், பிரெட் போன்றவற்றில் பலாப்பழக் கூழ் அல்லது மாவு பயன்படுத்தப்படுகிறது.
8. **பலாப்பழ மிட்டாய்:** பலாப்பழக் கூழை சர்க்கரையுடன் பதப்படுத்தி மிட்டாய் தயாரிக்கலாம்
9. **பலாப்பழ ஊறுகாய்:** காய் பலாப்பழத்தைக் கொண்டு சுவையான ஊறுகாய் தயாரிக்கலாம்
10. **பலாக்கொட்டை மாவு:** பலாக்கொட்டை வேகவைத்து உலர்த்தி அரைத்து மாவு தயாரிக்கலாம்.

பலாப்பழ மாவு, பலாப்பழ சிப்ஸ், உடனடி பலாக்காய் மற்றும் பலாக்கொட்டை மாவு அகியவற்றிற்கு தற்பொது உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் நல்ல வரவேற்பு உள்ளது. இவற்றை சிறு தொழிலாகவும் மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிப்பு தொழிலாகவும் துவங்கலாம்.

## மழைக்காலத்தில் கால்நடை மற்றும் கோழி பராமரிப்பு

மழைக்காலம் தீவனம், தண்ணீர் பற்றாக்குறையை போக்கினாலும், ஈரப்பதம் காரணமாக நோய்த் தொற்றுகள் அதிகரிக்கும். சரியான முன்னெச்சரிக்கையுடன் பெரும் இழப்புகளைத் தவிர்க்கலாம்.

**தொழுவம் மேலாண்மை:** தொழுவங்கள் உயரமான, நீர் தேங்காத இடத்தில் அமைக்கப்பட வேண்டும். கூரை ஓட்டைகள், சுவர் விரிசல்களை மழைக்கு முன் சரிசெய்யவும். வைக்கோல் அல்லது உமி படுக்கை தினமும் மாற்றி, ஈரப்பதம் இல்லாமல் பார்த்துக்கொள்ளவும். காற்றோட்டம் இருந்தாலும் நேரடி காற்று ஈரமான விலங்குகள் மீது படாமல் திரைச்சீலை பயன்படுத்தவும்.



**கோழி பராமரிப்பு:** பண்ணை தரைப்பகுதி ஈரமாகாமல் அடிக்கடி கிளறவும். குஞ்சுகளுக்கு நிலையான வெப்பநிலை தேவை. ராணிக்கெட், காம்போரோ நோய்களுக்கு எதிரான தடுப்பூசி கால அட்டவணையை கண்டிப்பாக பின்பற்றவும். தீவனம், தண்ணீர் பாத்திரங்களை மூடி வைத்து பூஞ்சை படராமல் பார்க்கவும்.

**தீவனம்:** ஈரமான அல்லது பூஞ்சை பிடித்த தீவனத்தை கொடுக்கக்கூடாது — இது அஃப்லாடாக்சின் விஷத்தன்மையை ஏற்படுத்தும். பசுந்தீவனத்தை அளவோடு, உலர் தீவனத்துடன் கலந்து கொடுக்கவும்; அதிகமாக கொடுத்தால் வயிறு உப்புசம் ஏற்படும்.

**தண்ணீர்:** சுத்தமான குடிநீரை மட்டும் வழங்கவும். மழைநீர் தேங்கிய குட்டைகளில் இருந்து விலங்குகள் தண்ணீர் குடிக்க விடக்கூடாது.

**ஒட்டுண்ணி கட்டுப்பாடு:** மழைக்காலத்தில் உட்புழு, வெளி ஒட்டுண்ணிகள் (உண்ணி, ஈ) அதிகரிக்கும். மருந்து புகட்டுதல், தெளிப்பு மருந்து பயன்படுத்துதல் ஆகியவற்றை தவறாமல் செய்யவும்.

**நோய் எச்சரிக்கை:** மாடுகளுக்கு கோமாரி மற்றும் தொண்டை அடைப்பான் தடுப்பூசியும், ஆடுகளுக்கு வெட்கை நோய் (PPR) மழைக்காலம் தொடங்குவதற்கு 2-3 வாரங்களுக்கு முன்பே தடுப்பூசி போட்டு முடிக்க வேண்டும்.

**ஊட்டச்சத்து:** தாது கலவை, வைட்டமின் A, D3, E ஆகியவற்றை தீவனத்தில் சேர்த்து நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும்.

நோய் வந்த பிறகு சிகிச்சை அளிப்பதை விட, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மிகவும் செலவு குறைந்தது. உள்ளூர் கால்நடை மருத்துவமனை அல்லது KVK-ஐ தொடர்பு கொண்டு தடுப்பூசி அட்டவணையை பின்பற்றவும்.


### ஆசிரியர் குழு

முனைவர் பெ.அழகேசன், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்
திரு.ப.பச்சியப்பன், விஞ்ஞானி (தோட்டக்கலை)
திரு.ச.சரவணக்குமார், விஞ்ஞானி (உழவியல்)
திருமதி. எம். சிவா, விஞ்ஞானி (மனையியல்)
திரு.ஆர்.டி. சீனிவாசன், விஞ்ஞானி (பயிர் பாதுகாப்பு)
திருமதி.ஏ. பிரேமலதா, விஞ்ஞானி (மண்ணியியல்)
மருத்துவர்.கே.கார்த்திக், விஞ்ஞானி (கால்நடை மருத்துவம்)



**முனைவர். பெ. அழகேசன்**

முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்
வேளாண் அறிவியல் நிலையம் - MYRADA
272, பெருமாள் நகர், புதுவள்ளியாம்பாளையம் ரோடு, கலிங்கியம் அஞ்சல் - 638453
கோபிசெட்டிபாளையம் தாலுக்கா, ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு
கைபேசி எண் : 9486077454 மின் அஞ்சல் : myradakvk@gmail.com, இணையதளம் : www.myradakvk.org